வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3434/அ3/2023 நாள். 03.06.2024

---

பொருள் : பள்ளிக் கல்வி – சார்நிலைப் பணி – வேலூர் மாவட்டம், அரசு மற்றும் நகரவை உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 01.08.2023 நிலவரப்படி மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்தமை – உபரி பட்டதாரி ஆசிரியர்களின் விவரங்கள் சரிபார்த்து சான்று வழங்க கோருதல் – தொடர்பாக.

பார்வை : சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.48800/சி3/இ1/2023 நாள்.30.05.2024.

----

வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு மற்றும் நகரவை உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் 01.08.2023 நிலவரப்படி மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்யப்பட்டது. பார்வையில் காணும் செயல்முறைகளில் ஆசிரியருடன் கூடிய உபரி பணியிடங்களை கூடுதல் தேவையுள்ள பள்ளிகளுக்கு பணிநிரவல் மாறுதல் (Deployment Counselling) கலந்தாய்வு நடத்திட தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஆசிரியருடன் கூடிய உபரி பணியிட விவரங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் இணைப்பிலுள்ள சார்ந்த பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் விவரங்களை சரிபார்க்க வேண்டும். சார்ந்த ஆசிரியர்களின் விவரங்களில் திருத்தம் ஏதுமிருப்பின் ஏற்கனவே உள்ள விவரங்களை **சிவப்பு நிறத்தில் வட்டமிட்டு**, சரியான விவரங்களை பூர்த்தி செய்து சார்ந்த ஆசிரியர்களிடம் கையொப்பம் பெற்று, படிவத்தில் கோரப்பட்டுள்ள **கூடுதல் தகவல்களைப்** பூர்த்தி செய்து, படிவத்துடன் **பள்ளித் தலைமையாசிரியர் மேலொப்பமிட்ட** கீழ்காணும் நகல்களை இணைத்து இவ்வலுவலக அ3 பிரிவில் 04.06.2024அன்று மாலை 04.00மணிக்குள் சமர்ப்பிக்குமாறு சார்ந்த அரசு மற்றும் நகரவை உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- ஆசிரியரின் பணிப்பதிவேட்டின் முதல் பக்க நகல்
- முதன்முதலில் பணியில் சேர்ந்த நாள் பணிப்பதிவேட்டில் பதியப்பட்ட பக்க நகல்
- பட்டதாரி ஆசிரியர் பதவியில் பணிவரன்முறை செய்த விவரம் பணிப்பதிவேட்டில் பதியப்பட்ட பக்க நகல்
- தற்போது பணிபுரியும் பள்ளியில் பணியில் சேர்ந்த விவரம் பணிப்பதிவேட்டில் பதியப்பட்ட பக்க நகல்
- அலகு விட்டு அலகு மாறுதல் (Unit Transfer) மூலம் பள்ளிக்கல்வித் துறையில் பணியில் சேர்ந்திருப்பின் அவ்விவரம் பதியப்பட்ட பக்க நகல்
- முன்னுரிமை (Priority) கோரி விண்ணப்பம் அளிக்கப்பட்டிருப்பின், தலைமையாசிரியர் கையொப்பமிட்ட ஆவண நகல்

**(1) முன்னுரிமை (Priority)**

- மனவளர்ச்சி குன்றிய மற்றும் மாற்றுத் திறனாளி குழந்தைகளின் பெற்றோர்
- சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்தவர்கள், இருதய, மூளை கட்டி அறுவைச் சிகிச்சை செய்தவர்கள், டையாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்வோர், புற்றுநோயாளிகள்
- இராணுவத்தில் பணிபுரிபவர்களின் மனைவியர்
- விதவைகள்/மனைவியை இழந்தவர்கள், சட்டப்படி விவகாரத்து பெற்ற பெண் ஆசிரியர்கள் மற்றும் 40 வயதைக் கடந்த திருமணம் செய்து கொள்ளாத பெண் பணியாளர்கள்.

ஆகியோர் முன்னுரிமை கோரினால் தக்க ஆவணங்களை பெற்று தலைமையாசிரியர் கையொப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**(2) விதிவிலக்கு**

- 40% கண்பார்வையற்றவர்கள்
- 40% மாற்றுத்திறனாளிகள்
- NCC பொறுப்பிலுள்ள பட்டதாரி ஆசிரியர்கள்

ஆகியோருக்குப் பதிலாக அதே பள்ளியில் அதே பாடத்தில் அடுத்த பணியிடத்தில் உள்ள இளையவரை (Next Station Junior) உபரி ஆசிரியர் பணிநிரவலுக்கு தலைமையாசிரியர் பரிந்துரைக்க வேண்டும்.

மேலும், ஆசிரியருடன் உபரி பணியிடத்தில் இடம் பெற்றுள்ள ஆசிரியர்களில் எவரேனும் ஏற்கனவே பணிநிரவல் கலந்தாய்வின் மூலம் தற்போது பணிபுரியும் பள்ளியில் சேர்ந்து 3 வருடங்கள் முழுவதும் முடிவடையாமல் பணிபுரிந்து கொண்டுள்ள ஆசிரியர்களின் பெயர்கள் (Within Three Years of Deployment Transfer) மீள இப்பெயர்ப்பட்டியலில் இடம் பெற்றிருப்பின், சார்ந்த ஆசிரியருக்குப் பதில் அதே பள்ளியில் அதே பாடத்தில் அடுத்த பணியிடத்தில் உள்ள இளையவரை (Next Station Junior) உபரி ஆசிரியர் பணிநிரவலுக்கு தலைமையாசிரியர் பரிந்துரைக்க வேண்டும். அவ்வாறே ஆசிரியருடன் உபரி பணியிடத்தில் இடம் பெற்றுள்ள ஆசிரியர்களில் எவரேனும் வேறு மாவட்டத்திற்கு பணிமாறுதலில் சென்றிருப்பின் அதன் விவரத்தினை படிவத்தில் குறிப்பிட்டு அதற்குரிய நகலை இணைத்தனுப்ப வேண்டும் எனவும் சார்ந்த அரசு மற்றும் நகரவை உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்ளுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – படிவம் 1 & 2

// ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.